யாழ்நகரில்
பத்து ரெலிபோன்களைச்
சேவையில் ஈடுபடுத்தி
முழுமையான ரெலிபோன்
சேவையினையே கண்ணும்
கருத்தும் உள்ள
ஓர் ஒரு நிறுவனம்
ரெலிகுளோப்
ரெலிபோன்: 25088 - பத்து
சமாந்தர லைன்கள்

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

ரெலிகுளோப்
ரெலிபோன் சேவையில்
வல்லவர்கள்,
நல்லவர்கள்
ரெலிகுளோப்
ஆர் ஜி கட்டடம்,
ஸ்ரான்லி வீதி, யாழ்நகர்

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு புரட்டாதி மீ 14 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 முஹர்ரம் பிறை 25 (30-09-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுடர்: 268

வடக்கில் மட்டும் எதற்காக?

பஸ் கட்டண உயர்வை எதிர்த்து நேரடி நடவடிக்கை

வ. பி. போ. சபை நிர்வாகத்துக்கு இரண்டு வார கால அவகாசம்

யாழ்ப்பாணம், செப்டம்பர்.30

வடக்கில் மட்டும் பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டது ஏன்? அது மீளாய்வு செய்யப்பட வேண்டும். பயணிகளுக்குச் சாதகமான பதில் இரண்டு வாரங்களுள் தரப்படவேண்டும். இல்லையேல் வடபகுதிப் பயணிகள் நேரடி நடவடிக்கையில் ஈடுபடுவர்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு எஸ். கனகரத்தினத்தை அவரது அலுவலகத்தில் சந்தித்து மகஜர் சமர்ப்பித்து பேச்சுவார்த்தை நடத்தியபோது இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றிய விவரமாவது:

1 200 பஸ்பயணிகள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்று நேற்றுக் காலை 10 மணியளவில் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு எஸ். கனகரத்தினத்திடம் அவரின் அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

பயணிகள் சார்பாக ஆறுபேர் கொண்ட பிரதிநிதிகள் குழுவின் சார்பில் திரு. தி இராஜேஸ்வரன் மகஜரைக் கையளித்தார்.

அதன் பின்னர் சபைத் தலைவர், அதிகாரிகள் குழுவினரும் பஸ்கட்டண உயர்வு பற்றி விவாதித்தனர்.

பஸ்கட்டணஉயர்வுக்கு பிரதிநிதிகள் கண்டனம்

(4ஆம் பக்கம் பார்க்க)

சாப்பாட்டுக் கடைகள் புலிகளின் கண்காணிப்பில்

யாழ்ப்பாணம், செப் 30

தேநீர்க்கடைகள், உணவு விடுதிகள், பேக்கரிகள், இறைச்சிக்கடை என்பன சுகாதார விடயங்கள் தொடர்பாக புலிகளின் கண்காணிப்பில் இயங்கும்.

இக்கடைகளில் விற்கப்படும் உணவுப் பதார்த்தங்கள் யாவும் சுகாதார முறைப்படி துப்பரவாகவும், கலப்படமின்றியும் நோய்களை பரப்பாதனவாகவும் இருக்க வேண்டும்.

கடைகள், சமையல் அறைகள் என்பன துப்பரவாகவும், ஊழியர்கள் தொற்றுநோய் தடுப்பு ஊசிகள் போட்டவர்களாகவும் இருக்கவேண்டும்.

வருடாந்தம் அனுமதிப் பத்திரங்களை மாநகர சபையிடம் புதுப்பிக்கவேண்டும்.

மீறி நடப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் தமிழீழ விடுதலைப் புலிகள் கடை உரிமையாளர்களுக்கு நடத்திய கூட்டத்தில் தெரிவித்தனர்.

இக் கூட்டத்தில் வைத்திய பரிசோதகர்கள், கடை உரிமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-5)

நேற்றும் பல இடங்களில் உண்ணாவிரதப் போர்

ஜே. ஆரின் கொடும்பாவியும் எரிப்பு

யாழ்ப்பாணம் செப். 30

வெலிக்கடை, பூஸாவில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வரும் தமிழ்க்கைதிகளுக்கு ஆதரவாக சந்தை மடம் பழம்வீதியில் நேற்று நடைபெற்ற ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தின் முடிவில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கொடும்பாவி எரிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8 மணி முதல் மாலை வரை நடைபெற்ற இந்த உண்ணாவிரதத்தில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

காங்கேசனில்

காங்கேசன்துறை கல்வி வட்டார பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுகோளுக்கமைய சிறை உண்ணாவிரதிகளுக்கு ஆதரவு தெரிவித்து இன்று உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

பாடசாலைகளின் முன்றலில் வகுப்புகளை பகிஷ்

(4ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக மாணவர் 4 நாள் பாதயாத்திரை

யாழ்ப்பாணம், செப். 30

யாழ் பல்கலைக்கழக மாணவரால் சிறையிலிருக்கும் உண்ணாவிரதிகளுக்கு ஆதரவாக நடத்தப்படும் பாதயாத்திரை நாளை திட்டமிட்டபடி நடைபெறும் என பல்கலைக்கழக மாணவர் அவை தெரிவித்துள்ளது.

இப் பாதயாத்திரை 4 நாட்கள் நடைபெறும்.

ஒவ்வொருநாள் முடிவிலும் யாத்திரிகர்கள் தங்கியிருக்கும் இடங்களில் கலாசார நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பாதயாத்திரை செல்லும் வழியிலுள்ள ஊர்களிலுள்ள மக்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு மாணவர் அவை கேட்டுள்ளது. பாதயாத்திரை செல்லும் பாதைகள் பின்வருமாறு:

முதலாம் நாள் (முதலாம் திகதி)- யாழ் பல்கலைக்கழகம், பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி, 4 ஆம் குறுக்குத் தெரு, குருநகர், பாசையூர், கொழும்புத்துறை, அரியாலை, நாயன்மார்கட்டு, கல்வியங்காடு, திருநெல்வேலி முத்துத்தம்பி பாடசாலையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

அந்தோ! தமிழ் ஆண்களே இல்லாத ஆலங்கேணித் தமிழ்க் கிராமம்!!

படையினர் சுட்ட மூவரை பெண்களே குழிவெட்டிப் புதைத்தனர்!!

திருகோணமலை, செப்டம்பர் 30

அந்தோ அநியாயம்! அக்கிரமம்!!

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கிராமமான ஆலங்கேணியில் தமிழ் ஆண்கள் எவருமே இல்லை!!

அகதி முகாமில் இருந்த மூன்று தமிழ் ஆண்களை படையினர் சுட்டுக்கொன்றனர். பிரேதங்களை அடக்கம் செய்ய ஆண்கள் எவரும் இருக்கவில்லை. பெண்களே ஒரு குழியை வெட்டி மூன்று சடலங்களையும் ஒன்றாகப் புதைத்தனர்!!!

நெஞ்சை உருக்கும் இச் சம்பவம் பற்றிய விபரம் வருமாறு:- கடந்த வெள்ளிக் கிழமை கிண்ணியாப் பிரதேசத்தில் உள்ள ஆலங்கேணிக் கிராமத்தில் ஆயுதப்படையினர் தேடுதல் நடத்தினர்.

அப்போது ஆயுதப் படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று தமிழ் ஆண்கள் உயிரிழந்தனர் மூவரும் அகதி முகாமில் இருந்த சமயம் தான் உயிரிழந்தனர்.

தேடுதலில் அங்கிருந்த ஆண்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். இதனால் ஆண்கள் எவரும் கிராமத்தில் இல்லை.

இதன் காரணமாக பெண்களே முன்நின்று புதைகுழி தோண்டி, மூன்று பேரின் சடலங்களையும் ஒன்றாகப் போட்டு அடக்கம் செய்தனர்.

இறந்த மூவரின் பெயர்கள் வருமாறு:-

சின்னவன் (27 வயது) காந்தன் (30 வயது) பாலன் (45 வயது) இவர்கள் ஈச்சந்தீவு அகதி முகாமில் தங்கி இருந்தவர்கள். (அ-ஈ-'50)

பூஸாவுக்கு போய்வரும் தமிழர்கள்

திருகோணமலை செப். 30

திருகோணமலையில் கைது செய்யப்படும் தமிழர்கள் பூஸா தடுப்பு முகாம் போவதும் வருவதுமாகவே இருக்கின்றனர்.

கடந்த வாரம் 42 தமிழர்கள் பூஸாவில் இருந்து திருமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

ஆனால் கடந்த சனி 53 தமிழர்கள் திருமலை இராணுவ முகாமில் இருந்து பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (உ-எ-150)

சிறையில் போர் தொடர்கிறது

யாழ்ப்பாணம், செப். 30

வெலிக்கடைச் சிறைச்சாலையிலும் பூஸாவிலும் தமிழ் கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

வெலிக்கடை சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருக்கும் 81 பேரில் 35 பேர் தொடர்ந்து 26 ஆவது நாளாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

இவர்களில் மூன்றுபேர் கவலைக்கிடமான நிலையில் இராணுவ ஆஸ்பத்திரியில் பரிசோதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பூஸாவில் 110 பேர் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள்.

வெலிக்கடையில் உண்ணாவிரதப் போரில் குதித்த ஒருவர் இறந்துவிட்டதாகப் பரவிய வதந்தி ஒன்றை அடுத்து அங்குள்ள கைதிகள் ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும்-

அதனையடுத்து இறந்ததாகக் கூறப்படும் கைதி சிறை அதிகாரிகளினால் மயங்கிய நிலையில் மற்றைய கைதிகளுக்குக் காண்பிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. (உ)

யாழ்நகரில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி

யாழ்ப்பாணம், செப் 30

சிறைக்கைதிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக மாணவ அமைப்புக்களின் கூட்டமைப்பு இன்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்துகின்றது.

சகல பாடசாலைகளில் இருந்தும் ஆரம்பமாகும் பேரணி பெருமாள் கோவிலடியில் இருந்து காலை 10 மணியளவில் பருத்தித்துறை வீதி ஊடாக திருநெல்வேலி சந்தியை வந்தடையும்.

உரும்பிராயில் இருந்து காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் பேரணியும் திருநெல்வேலி சந்தியை வந்தடையும்.

இரண்டு பேரணிகளும் இணைந்து பல்கலைக்கழகத்தை சென்றடையும். இறுதியில் பொதுக் கூட்டம் நடைபெறும். (உ-எ)

மட்டுநகரில் ஏ. எஸ். பியின் மகன் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, செப் 30

மட்டக்களப்பு உதவி பொலிஸ் அதிபர் திரு தியோபிளஸின் 17வயது மகன் தியோக்குமார் நேற்றுப் பிற்பகல் ஆயுததாரிகளான இனந் தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது சடலம் மட்டுநகர் - திருமலை வீதியில் நேற்று இரவு 7-15 மணியளவில் கண்டு பிடிக்கப்பட்டது. அவரது சடலத்திற்கு அருகே மற்றொரு இளைஞரின் சடலமும் காணப்பட்டது. அது அவரது நண்பரின் சடலமாக இருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

தியோக்குமார், புனித மிக்கேல் கல்லூரியில் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பில் படித்துக்கொண்டிருப்பவர்.

நேற்று பிற்பகல் 2 30 மணியளவில் பாடசாலை முடிந்து கல்லடி பொலீஸ் விடுதி நோக்கிச் சென்று கொண்டிருந்த சமயம் ஆயுததாரிகளான இனந் தெரியாத —இளைஞர்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



அப்பாடா பெரிய நிம்மதி! அப்ப இனி துணிஞ்சு போய் ரவுண் கடையளிலை தேத்தண்ணி குடிக்கலாம், சாப்பிடலாம் எண்டு சொல்லுங்கோவேன்!!

சுபநேரம்

30—9—1986
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10 32 முதல் 12 02 வரை
ராகுகாலம்:
3 02 முதல் 4.32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நாளை முதல் வடபகுதி எங்கும் ஹர்த்தாலுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம். செப் 30

நாளை புதன் கிழமை முதல் வடக்கில் கால வரையறையற்ற ஹர்த்தால் நடைபெறும்.

வெளி மாவட்டங்களுக்கான லொறிப் போக்குவரத்தும் கால வரையறையின்றி நிறுத்தப்படும்.

தமிழ்ப் பகுதிகளில் நடைபெறும் அழிப்புக் கொள்கைகளைக் கண்டித்தே இப்போராட்டம்.

யாழ் வர்த்தகர் சங்கம், யாழ் முஸ்லிம் போக்குவரத்து ஒன்றியம், வடபிராந்திய லொறி போக்குவரத்துச் சங்கம் ஆகியவை கூட்டாக இப் போராட்டத்தினை முஸ்தீபு செய்துள்ளன.

1985 மார்ச் 14 ஆம்

(4ஆம் பக்கம் பார்க்க)

பௌத்த பிக்குவுக்கு வவுனியாவில் மக்கள் சார்பில் முகத்தில் "அறையப்பட்டது"!

வவுனியா, செப். 30

உயிரிழந்த வடபகுதி சர்வோதய பிரமுகர் திரு கதிரமலைக்கு அனுதாபம் தெரிவிக்கும் கூட்டம் தொடர்பாக வவுனியா பிக்கு ஒருவரினால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு வவுனியா மக்கள் சார்பில் முகத்தில் அறைவது போல பதில் இறுக்கப்பட்டது.

இது பற்றிய விவரமாவது:-

நேற்றுக் காலை வவுனியா நகரில் இந்தக் கூட்டம் நடந்தபோது பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகளோ தமிழ் மக்கள் பிரதிநிதிகளோ அதில் கலந்து கொள்ளவில்லை.

பெரும்பான்மை இனத்தவர்களே பெரும்பான்மையாகக் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்துக்கான அறிவித்தல் பொலீஸ் வாகனமொன்றின் ஒலிபெருக்கி மூலம் மேற்கொள்ளப்பட்டது.

ஆயுதபடையினரின் பாதுகாவலுடன் கூட்டம் நடந்தது. பௌத்த மதகுரு ஒருவர், கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகளை கேட்டுக்கொண்டாராம்.

'எங்களுக்குள் நடைபெறும் சில பிழைகள் பற்றிக் கவனிக்க எம்மத்தியில் பலர் இருக்கிறார்கள். எம் மக்கள் தினமும் உயிரிழந்து கொண்டு இருக்கின்றனரே! அது பற்றியாரும் கவனித்தீர்களா?''-இப்படி பௌத்த மதகுருவுக்குத் தெரிவிக்கப்பட்டதாம். (உ-எ)

புலிகள் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப் 30

முல்லைத்தீவில் ஞாயிறு மாலை 6 மணியளவில் சிலாவத்திப் பிட்டருக்கும் தம்மலாக் குளத்திற்கும் இடையில் சிலாவத்தை முகாமிலிருந்து ஒன்றரை மைல் தொலைவில் வானொன்றில் வந்துகொண்டிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தினர்.

இப்படி புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி தெரியவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

போராளி மரணம்

யாழ்ப்பாணம், செப் 30

விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த வெஸ்டர் (மன்னார்) கடந்த ஞாயிற்றுக் கிழமை வீரமரணமடைந்தார்.

கடந்த 12 ஆம் திகதி மன்னாரில் அரச படையினருக்கு எதிரான நேரடி மோதலின் [illegible] போராடி இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியிருந்தார். (உ)

முஸ்லிம் பெண் காயம்

திருகோணமலை செப். 30

ஆயுத படையினர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமுற்ற ரஹ்மத் உம்மா என்ற முஸ்லிம் பெண் திருமலையில் இருந்து அபாயகரமான நிலையில் அநுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தம்பலகாமத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் இம் முஸ்லிம் இளம் பெண் காயப்பட்டார். (உ-எ-150)

வவுணதீவு - வலையிறவு பாலத்தைப் பாவிக்க படையினர் கட்டுப்பாடு

மட்டக்களப்பு செப் 30

வவுணதீவு - வலையிறவு பாலத்தைத் திருத்தும் வேலைகளில் மட்டுவாவிக் கரையில் முகாமை இட்டுள்ள ஆயுதபடையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

பாலம் திருத்தப்பட்ட பின்னர், ஆயுத படையினரின் வாகனங்களும் கூட்டுறவுச் சங்க, அரச வாகனங்களும் மட்டுமே அப் பாலத்தினூடு செல்ல அனுமதிக்கப்படும்.

மக்கள் நடந்து செல்லலாம் ஆனால் ஆயுதப்படையினரின் தீவிர பரிசோதனைகளுக்கு அவர்கள் உட்படுத்தப்படுவர்.

பாலம் திருத்தப்பட்ட பின்னர் அதன் அருகில் ஆயுத படையினரின் நிரந்தர முகாம் ஒன்று நிறுவப்படும் - இப்படி தெரிவிக்கப்படுகிறது. (க-எ)

இளைய தலைமுறையின் [illegible] வரும் இன்றைய நாளிதழ்

கிழக்கு மாகாண அழிவுகளை விசாரிக்க

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் கொண்ட ஆணைக்குழு நியமிக்குக

பிரசைகள் குழுவின் இணைப்புக்குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 30

செப்டெம்பர் மாதத்தில் கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள், அழிவுகள், பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டமை ஆகியவை குறித்து விசாரணை நடத்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் கொண்ட ஆணைக்குழு ஒன்றை நியமியுங்கள்.

இப்படி பிரசைகள் குழுக்களின் இணைப்புக்குழு ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமான தீர்மானம் நேற்றுக்காலை இடம்பெற்ற இணைப்புக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஏனைய தீர்மானங்கள் வருமாறு;

1 வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிக்க அரச அதிபர் எடுக்கும் முயற்சிகளுக்கு பிரசைகள் குழுக்கள் ஆதரவு வழங்கும்.

2. 1977 ஜனவரி 1ம் திகதி முதல் 1982 டிசம்பர் 31ஆம் திகதி வரையான காலத்திலும் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்க புனர்வாழ்வு அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3 பாதிக்கப்பட்டோரின் சரியான விபரங்கள் பிரசைகள் குழுக்களிடம் உள்ளன. நிதி உதவி செய்யும் தொண்டர் ஸ்தாபனங்களின் உதவியை இக்குழுக்கள் எதிர்பார்த்து உள்ளன.

இதனை இணைப்புக்குழு தொண்டர் ஸ்தாபனங்களுக்கு அறிவிக்கின்றது.

4. மோசமான நிலையில் தமிழ்ப்பகுதிகளில் வசிக்கும் அகதிகள் பற்றி ஜனாதிபதி, புனர்வாழ்வு அமைச்சர் ஆகியோரின் கவனத்துக்கு குழு கொண்டு வருகிறது. (உ-[illegible])

கல்வித் துறையில் நிலைமை மாறிவிட்டது

மானிப்பாய், செப் 30

கடந்த காலங்களில் எல்லாம் நாம் டாக்டர்களாகவும் பட்டதாரிகளாகவும் வர விரும்பி அதற்கான கல்வியில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தோம். ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. தொழில் நுட்பம் சம்பந்தமான கலைகளை நெறிகளை பின்பற்றுகின்றோம். தொழிற் கற்கைகளினால் தன் மனிதனுடைய சிந்தனை சக்திகளும் எண்ணங்களும் வெளிக்கொணரப்படுகின்றன.

இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற கல்விக் கண்காட்சியின் போது உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் இவ்வாறு பேசினார்.

மானிப்பாய் வட்டாரப் பாடசாலைகளின் கல்விக் கண்காட்சி உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளை உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தலைமை வகித்தார்.

உதவி அரச அதிபர் திரு மகாலிங்கம் மேலும் கூறியது:-

பாடசாலைகளில் முன்னர் ஏட்டுக்கல்வி முறை மட்டுமே இருந்தது. ஆனால் இன்று செயற்பாட்டின் மூலமே கல்வி போதிக்கப்படுகின்றது.

செயல் முறை கற்றல் மூலம் மனிதனுடைய சிந்தனைகளையும், ஆக்கங்களையும், திறமைகளையும் வெளிக்கொணர முடிகின்றது.

இவ்வாறு அவர் கூறினார். (இ-90)

கல்வி வளர்ச்சிக்கு பொருட்காட்சிகள் நன்கு உதவும்

வட்டுக்கோட்டை, செப் 30

இன்றைய கல்வித்திட்டங்களை ஆராய்ந்து நன்கு அறிந்து கொண்டவர்கள் கல்வி வளர்ச்சிக்கு கல்விப் பொருட்காட்சிகள் நிச்சயமாக உதவும் என்பதை உணர்வார்கள்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்விப் பொருட்காட்சி பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி வைத்து திறந்து வைத்து உரையாற்றிய பிரதம கல்வி அதிகாரி திரு. வே. தங்கராசா மேற்கண்டவாறு கூறினார்.

வட்டுக்கோட்டை வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா தலைமையில் வைபவம் நடைபெற்றது.

திரு. வே. தங்கராசா தொடர்ந்து உரையாற்றிய போது வட்டுக்கோட்டை கல்வி அதிகாரி திரு ப. சண்முகராசா நீண்டகால அனுபவமும் ஆற்றலும் மிக்கவர். அவரது சிறந்த செயற்பாட்டினை இன்றைய கல்விக் கண்காட்சி எடுத்துக் காட்டுகின்றது என்றார்.

பிரதம கல்வி அதிகாரி திரு குலசேகரம், யாழ் கல்வி அதிகாரி திரு இ. சிவானந்தன், ஆங்கில ஆலோசகர் திரு. எஸ். தெய்வதவபாலன், சங்கீதக் கல்வி அதிகாரி திரு சு. கணபதிப்பிள்ளை, சிவதர்மவள்ளை திரு. க. கனகராசா ஆகியோர் உட்பட மற்றும் பலரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய அதிபர் திரு ஏ. இராசநாயகம் நன்றி நவின்றார் (இ161)

கலாசார அவையின் கவின் கலை அரங்கு

ஞாயிறன்று சிறப்பாக நடந்தது

பலாலி, செப் 30

தமிழர் கலாசார அவையின் அரங்கு நிகழ்ச்சிகளில் முதல் நிகழ்ச்சியாக ஞாயிற்றுக்கிழமையன்று யாழ். வின்சர் அரங்கில் கவின் கலை அரங்கு நடைபெற்றது.

"என்று தணியும் எங்கள் சுதந்திரதாகம்" என்ற தலைப்பில் கவிஞர் சோ. பத்மநாதன் அவர்களின் தலைமையில் கவிஞர்கள் நல்லை அமிழ்தன், வே. யோகேஸ்வரன், புதுவை இரத்தினதுரை, வேல் மாறன், ஜெயசீலன் ஆகியோர் கலந்து கொண்ட கவியரங்கம்—

திடற்புலம் குகராசாவின் மனிதனும் மிருகமும் என்ற நவீன உத்தி நாடகமும் நடைபெற்றன.

நீண்ட நாட்களுக்குப் பின் யாழ் நகரில் நடைபெற்ற கவியரங்கில் பல நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-119)

ஆங்கில தின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், செப் 30

யாழ் மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தினப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

இப்போட்டி மூன்று பாடசாலைப் பிரிவுகளில் நடைபெற்றது.

போட்டி முடிவுகள் தற்போது உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டிருக்கின்றன.

இம்முடிவுகள் தினமும் தொடர்ந்து உதயனில் வெளிவரும்.

போட்டி முடிவுகள் எட்டாம் நாளாக இன்று பிரசுரமாகின்றன.

பிரிவு 2 ஆண்டு 11

பா ஓதல்

1. எஸ். சுமிலா வீரசிங்கம் ம. வி. 2. ரி. பிரேமினி சின்மய பாரதி வித் 3 ஏ. அன்பழகன் இளவாலை

படம்பார்த்துக் கட்டுரை

1. ரி. பிரேமினி சின்மயபாரதி வித் 2. வி. விஜயகுமார் சின்மய பாரதி வி 3 ஏ. அன்பழகன் இளவாலை மெய்கண்டான் ம. வி.

பிரிவு 2 ஆண்டு 7:8

நாடகம்

1 சந்திரோதை தமிழ் கந்தையா வித். 2 நல்லூர் தெற்கு வித் கினேஸ்வரா வித். 3. கோப்பாய் சரவணபவானந்த வித்

ஆண்டு 9, 10

1 சென். அன்ரனீஸ் பாஷையூர் 2. கோப்பாய் சரவணபவானந்த வித்.

ஆண்டு 11 12

1 சென் அன்ரனீஸ், பாஷையூர்

பிரிவு: 3

பாடசாலை

ஆண்டு: 4

பா ஓதல்

1 பி செழியன் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 2. ரி. சிவானி ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 3 பி ஆனந்தன் நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்

பாலர் அபிநயப்பாட்டு

1. ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 2 தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி 3. இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

பாத்திர நாடகம்

1 ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 2 வலந்தலை தெற்கு அ. மி. த க. பாடசாலை 3 இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

வாசிப்பு;

1. ஆர். அபிராணி ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 2. எஸ். பௌமியா ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 3. சி. சிவகரன் கொக்குவில் இந்து ஆரம்பகல்வி

பா ஓதல்

1. பி. செழியன் ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 2. ரி.சிவானி ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 3 பி ஆனந்தன் நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்

பாலர் (சிறுவர்பாடல்) அபிநயப்பா

1. ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 2 தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி 3. இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

பாத்திர நாடகம்

1, ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் 2. வலந்தலை தெற்கு அ. மி. த பாடசாலை 3. இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை

வாசிப்பு!

1. ஆர். அபிராணி ஜோன் பொஸ்கோ வித். 2. எஸ் பௌமியா ஜோன் பொஸ்கோ வித். 3 சி. சிவகரன் கொக்குவில் இந்து ஆரம்பக்கல்வி

(வளரும்)

மீனவர்களுக்கு உதவுமாறு கோரிக்கை

காங்கேசன்துறை, செப். 30

கடல் வலயச் சட்டத்தினால் பாதிக்கப்பட்ட கடற் தொழிலாளர்களுக்கு செப்டம்பர் மாதத்துக்குரிய உணவுப் பொருள்கள் வழங்குவதில் உள்ள தடையை நீக்கும்படி மயிலிட்டி நலன்புரிச் சங்கம் சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளரை கோரியுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட மீனவர்களுக்கான பொருள்கள் இதுவரை வழங்கப்படவில்லை.

பெரிதும் கஷ்ட நிலையில் உள்ள அந்த மக்களுக்கு உடனடியாக உதவும்படி மேற்படி சங்கம் அனுப்பிய கடிதத்தில் கோரியுள்ளது. (உ-68)

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு ஓர் இனிமையான செய்தி!

ரெலிபோன்-ரெலக்ஸ் சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்

மைக்ரே கொம்யூனிக்கேசன் ஸ்தாபனத்தார்

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை

மைக்ரே கொம்யூனிக்கேசன்

கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில்.

பிரயாண ஒழுங்குகள்

● கனடா
● டென்மார்க்
● ஜேர்மனி
● சவூதி

கனடா, டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளார். இதுவரை எமது பல பயணங்கள் விரைவாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் டென்மார்க்கிற்கு அந்நாடு விதிக்கும் தடைகளையும் மீறி எமது முகவர் உங்களை நேரடியாக அழைத்துச் செல்வார்.

ஜேர்மனிக்குச் செல்ல விரும்பும் ஆண்கள், பெண்கள் (குறிப்பாக அங்கு மணம் செய்யவிருப்பவர்கள், மணம் செய்தவர் ஒன்றுகூட) உங்களை எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்.

சவூதி அரேபியாவிற்கு விசா அனுப்புக்கு உடன் விரைவாக அனுப்பி வைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும் சென்ற மாதம் சவூதிக்கு எம்மிடம் பாஸ்போட் தந்தவர்கள் இந்த மாதம் 18ஆம் திகதி சவூதி சென்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம்
வீதி,
கோண்டாவில்
கிழக்கு,
கோண்டாவில்;

* உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் ரூர்ஸ் எனும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.
* ஒமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் கிளை நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

யாழ் மாவட்டத்தில்

வீட்டுத்தோட்டச் செய்கையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 30

யாழ் மாவட்டத்தில் வீட்டுத்தோட்டச் செய்கையை அபிவிருத்தி செய்ய யாழ் மாவட்ட சமூகநல சேவை உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

குடியிருப்பாளர்கள் தமது வீட்டுத் தோட்டங்களிலேயே இலகுவானதும், இலாபகரமானதுமான போஷாக்குள்ள காய்கறி பழவகைகளை நடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்;

வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நாற்றுகள் விதைகள் என்பன சமூகநல சேவை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடியிருப்பாளர்களிடம் இருந்து வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவைப்படும் பரிமாணங்களின் விபரங்களை பெறுவதற்கான படிவங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன

பின்னர் சமூகநல சேவை உத்தியோகத்தர்கள் உரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள். (இ-9)

சிறுவயதில் இழந்த கல்வியை நூலகங்கள் மூலம் பெறலாம்

பேராசிரியர் நேசையா உரை

யாழ்ப்பாணம், செப். 30

சிறுவயதில் துரதிர்ஷ்டவசமாக பாடசாலைக் கல்வியை இழந்தவர்கள் தாம் விட்ட படிப்பை - கலை அறிவை - நூலகங்களின் துணையுடன் பெருக்கிக்கொள்ளலாம்

இவ்வாறு பேராசிரியர் திரு கே. நேசையா கூறினார்.

யாழ் மாநகர சபையின் 5ஆவது கிளை நூல்நிலையம் கடந்த ஞாயிறன்று குருநகரில் திறந்து வைக்கப்பட்ட போது அங்கு பேசுகையில் அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

வாழ்க்கை என்பது ஒரு படிப்பினை. படிப்பு என்பது வாழ்க்கை முழுவதுமான ஒரு நிகழ்வு. சிறுவயதில்தான் நாம் படிக்கலாம் என்றில்லை.

சிறுவயதில் இழந்த கல்வியை நூலகங்களின் உதவியுடன் பின்னரும் பெருக்கிக்கொள்ளலாம்.

இப்படி திரு நேசையா தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

இந்த நூல்நிலையக்கிளை 3 லட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டது. 60 ஆயிரம் ரூபா பெறுமதியான தளவாடங்களை லயன்ஸ் கழகம் வழங்கியிருந்தது.

நூல்நிலையக் கிளையைத் திறந்து வைத்த யாழ் ஆயர் அதி வண. கலாநிதி தியோகுப்பிள்ளை ஆண்டகை தமது உரையில் கூறியதாவது:-

பெரும் கஷ்டங்கள் மத்தியில் உருவாக்கிய எமது யாழ் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டது ஒரு தாங்கமுடியாத துன்ப நிகழ்வு. இதைச் செய்தவர்களுக்கு எப்படித்தான் அகற்கு மனம் வந்ததோ தெரியவில்லை.

இந்நிகழ்வை நினைத்து வெறுமனே துக்கப்பட்டுக்கொண்டு இராமல் உடனே அதன்புதிய கிளைகளை நகரெங்கும் நிறுவி எதிர்கால சந்ததியினரின் தேவைகளுக்காக இக்கட்டான இந்நிலையிலும் கடமைபுரிந்து வரும் யாழ் மாநகரசபையினர் பாராட்டுக்குரியவர்களே.

—இப்படி அவர் சொன்னார்.

நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த ஆணையாளர் திரு. சி. [illegible] தமது பேச்சில்— தமிழ்மக்களின் முக்கியமான மூலதனம் கல்வியே. இக்கட்டான இந்நிலையில் எமது சிறுர்கள் தங்கள் கல்வியை பாடசாலைகள் மூலமாக மட்டுமன்றி, நூலகங்கள் மூலமாகவும் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்றார்.

சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு. மைக்கல் ரோசப் பேசுகையில்;

மனிதன் வளரவேண்டுமாயின் அவன் அறிவு வளர வேண்டும். அவனது எண்ணங்கள் வாசிப்பின் மூலம் வளர வேண்டும் என்றார்.

இவ்விழாவின் இறுதியில் ஆயரும் பொதுமக்களும் பல நூல்களை இந்நூல்நிலையத்திற்கு அன்பளிப்புச் செய்தனர். (உ-5)

சங்கீத, நடன போட்டிகள்

சரவெட்டி, செப். 30

வவுனியா மாவட்டச் சங்கீத நடனப் போட்டிகள் அடுத்த மாதம் (அக்டோபர்) முதல் வாரத்தில் நடத்துவதற்கான ஒழுங்குகளை வவுனியா மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு [illegible] மேற்கொண்டு வருகிறார். (உ,70)

மக்கள் முகம்

முதுகலைமாணி பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், செப். 30

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியின் சிரேஷ்ட விஞ்ஞானப் பட்டதாரியாகிய திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் யாழ் பல்கலைக் கழகம் அண்மையில் நடத்திய முதுகலைமாணி கல்வியியல் (எம் ஏ) பரீட்சையில் சித்தியடைந்தார்

முதல் வகுப்பில் சித்தி எய்திய திருமதி சரோஜினி கல்யாணசுந்தரேசன் தரம் இரண்டு விசேஷ ஆசிரியர் பதவியையும் 1970 ஆம் ஆண்டிலிருந்து வகித்து வருகிறார்.

கல்வி டிப்ளோமாப் பரீட்சையிலும் திறமைச் சித்தி பெற்றவர். (இ)

பரிபாலன சபை

வேலணை, செப். 30

மண்டைதீவு கண்ணகி அம்மன் கோவில் பரிபாலன சபையின் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டார்கள்

தலைவர்; திரு வி சோமசுந்தரம் உபதலைவர்; திரு கு. க. நடராசா செயலாளர்: திரு க. பேரின்பநாதன் உபசெயலாளர்: திரு ஆ. சோமசுந்தரம் பொருளாளர்: திரு. இ. கனகநாதன். (இ-167)

பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க் செல்வதற்கு உடனடியாக பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

★ கனடா
★ ஜேர்மன்
★ பிரான்ஸ்
★ டென்மார்க்
★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா,
பொன்ட், BOND ரிக்கட்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

உதய சங்கற்பம்

எல்லா ஜீவராசிகளுக்கும் நன்மையையே கருது. இது உன்னுடைய வாழ்க்கையை வளமுடையதாகவும் உன்னை சந்தோஷமுடையவனாகவும், அமைதியுடையவனாகவும் செய்யும்.

—சுவாமி சிவானந்தர்.

உதயன்
உண்மை - அச்சமின்மை - நடுநிலைமை

இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24305
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 30-9-1986 த பெ. இல.23

பண்பாட்டுக் கொலைகள்

வார இறுதியில் குருநகரில் நூல் நிலையம் ஒன்று திறந்து வைக்கப்பட்டது. யாழ் மாநகர சபையின் ஆதரவிலேயே அந்த நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் அறிவுப் பெட்டகமாகத் திகழ்ந்த பொது நூல் நிலையம் 1981 ஆம் ஆண்டில் தீக்கிரையாக்கப்பட்டது. அறிவின் அருமை பெருமை தெரியாத ஒரு கூட்டம் அதனை எரித்தது. ஆனால் வடக்கு மக்களின் அறிவு வளர்ச்சியில் பொறாமை கொண்ட ஒரு கூட்டம் இந்த அரக்கத்தனமான சதிக்குப் பின்னே நின்றது.

1981 இல் அழிக்கப்பட்ட நூல் நிலையம் ஓரளவேனும் இயங்கி வந்தது. 1984 இல் புதிதாகவும் ஒருபகுதி கட்டி முடிக்கப்பட்டது.

ஆனால் 1985 ஏப்ரலுக்குப் பிறகு முற்றாகப் பாவிக்க முடியாதவாறு கோட்டையில் இராணுவம் குடிகொண்டது. அதன் பின்னர் நூல் நிலைய சேவையை பரவலாக்கும் விதத்தில் நகரின் பல பகுதிகளிலும் யாழ் மாநகரசபை நூலகங்களை நிறுவி வருகிறது. மக்களின் அறிவுப் பசிக்கு இரைபோடும் இந்த நல்ல சேவையை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் செய்து வருகிறார். அதற்காக அவரை யாழ் ஆயர் அதி. வந். வ. தியோகுப்பிள்ளை பாராட்டி இருக்கிறார். நாமும் சேர்ந்து பாராட்டுகிறோம்.

இதே வேளையில், வடக்கின் மூலை முடுக்கு எல்லாம் இராணுவ முகாம்களை நிறுவி பண்பாட்டுப் படுகொலைகளை இந்த அரசாங்கம் நடத்தி வருவது குறித்து இங்கு பிரஸ்தாபிக்க வேண்டி உள்ளது. மிக அண்மையில் யாழ் பிரஜைகள் குழு ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜரில் வடக்கில் நடத்தப்படும் பண்பாட்டுக் கொலைகள் குறித்து விபரிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் நூல் நிலையம் முதற்கொண்டு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூல் நிலையம் வரை அரச படைகள் வடக்கில் நடத்திய பண்பாட்டுக் கொலைகள் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இராணுவ முகாம்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டிருப்பது குறித்தும் அந்த அறிக்கை விவரித்திருக்கிறது.

வடக்கில் மட்டுமன்றி, தமிழ் மண் எங்கும் குடிமக்கள் பரந்து செறிந்து வாழும் பகுதிகளில் படை முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. அவை தமிழ் மக்களைக் கொன்று குவிப்பது மட்டுமன்றி, தமிழரின் எதிர்காலத்தையும் சீரழிக்கும் விதத்தில் திட்டமிட்டுப் பல அட்டூழியங்களைச் செய்து வருகின்றன. அந்தத் திட்டத்தின் ஒரு அங்கம்தான் பண்பாட்டுக் கொலைகள்.

இது குறித்து இப்பத்தியில் ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் எடுத்துரைக்கப்பட்டது வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

தமிழ் மக்களையும் அழித்து அவர்கள் கலாசாரம், பண்பாடு கல்வி விருத்தி ஆகியவற்றையும் அழித்து இலங்கை முழுவதையும் ஒரு சிங்கள — பௌத்த நாடாக்குவதற்கான ஏற்பாடுகளே இந்த அட்டூழியங்கள். இவை எழுந்தமானத்தில் செய்யப்படுபவை அல்ல. நன்றாகத் திட்டமிட்டுச் செய்யப்படுபவை.

தமிழர்களையும், அவர்களது நாடு நகரங்களையும், கலைகலாசாரங்களையும், பண்பாடு, அறிவு வளர்ச்சியையும் வேர் அறுத்து அழிக்கும் திட்டம் மெது மெதுவாக அரங்கேறி வருகிறது.

திருட்டுச் செய்தவன் வீட்டில் போய் அது குறித்து முறையிட்டால் நியாயம் கிடைக்குமா? தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டும், அவர்களை வாழவிடவேண்டும் என்று அரசாங்கத்துக்கு சிறிதளவேனும் அக்கறையில்லை. இதனை அரசு வெளிப்படையாகச் சொல்வதில்லை. ஆனால் செயலில் காட்டி வருகிறது. அதனை மறைக்க முடியாது. எனவே அரசு செய்யும் அட்டூழியங்கள் குறித்து அதனிடம் முறையிட்டு எமக்கு ஆகப்போவது எதுவுமில்லை.

அரசாங்கத்தின் அடக்கு முறையை, அடாவடித்தனங்களை; தமிழ் மக்களுக்கு எதிரான சதியை தமிழ் மக்கள் எதிர்த்துச் செயலாற்றுவது தான் இப்போது உள்ள ஒரேயொரு மார்க்கம்.

எமக்கு நடக்கும் அநியாயங்கள், அட்டூழியங்கள் குறித்து சர்வதேசியத்துக்கு எடுத்துச் சொல்வதும் எமக்கு விடிவு கிடைப்பதற்கு ஓரளவேனும் உதவும்.

அந்த இரண்டையும் விடுத்து ஜனாதிபதிக்கும், மந்திரிகளுக்கும் மகஜர் அனுப்பி நேரத்தையும், காகிதத்தையும், மையையும் செலவிடுவதால் பயனில்லை.

நித்திரை செய்பவனை இலேசாகத் தட்டி எழுப்பலாம். ஆனால் நித்திரை போல் பாசாங்கு செய்பவனை எழுப்ப இயலாது. இதனை நன்றாக உணர்ந்து செயற்படுவதே இன்றைய தேவை.

காவலூரில்
நன்னீரைப் பேணுதல்
பற்றி மக்களுக்குப் பயிற்சி

ஊர்காவற்றுறை,செப்30

‘தீவுப்பகுதியில் நன்னீரைப் பெறுதலும் அதனைப்பேணுதலும்’ என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு ஒன்று ஊர்காவற்றுறையில் நடைபெறவுள்ளது.

காவலூர் இலக்கிய வட்டாரத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சி வகுப்பை சர்வதேச நாணய நிதியத்தில் பணியாற்றும்— இப்பகுதியைச் சேர்ந்த நிபுணர் ஒருவர் நடத்துவார்.

பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் காவலூர் இலக்

(4ம் பக்கம் பார்க்க)

‘ஆர்க்ரேயலை’ வாங்காது

லண்டன், செப் 29

பிரிட்டனின் விமானத் தாங்கிக் கப்பலான ‘ஆர்க்ரேயலை’ இந்தியா வாங்காது.

இவ்வாறு இந்திய கடற்படை தலைவர் அட்மிரல் பாஹியானி லண்டனில் தெரிவித்தார்.

இந்திய கடற்படைக்கென இன்னும் பத்து ஆண்டுகளில் உள்நாட்டிலேயே விமானம் தாங்கிக் கப்பல்கள் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப்படும்.

இந்திய கடற்படை இத்தகைய வடிவமைப்பு பணியில் ஈடுபட்டுள்ளது. (ஒ)

சேர்னுபில் மீண்டும் இயங்கும்

மாஸ்கோ, செப். 29

சேர்னுபில் அணு ஆலை மீண்டும் இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற உலகின் மிக மோசமான அணு ஆலை விபத்தினால் இது வரை காலமும் சேர்னுபில் ஆலை இயங்காமல் இருந்தது. (ஒ)

தாய்லாந்து புகார்

பாங்கொக், செப் 29

வியட்நாமின் துருப்புக்கள் ஊடுருவல் செய்துள்ளன என்று தாய்லாந்து ஐ நா. ஸ்தாபனத்திடம் முறையிட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்த ஊடுருவல் நடைபெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பூச்சியாவில் நிலைகொண்டுள்ள வியட்நாமிய துருப்புக்களே தாய்லாந்தின் எல்லையைத் தாண்டி ஊடுருவல் மேற்கொண்டன எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

விமானத்தில் தீ
பயணிகள் தப்பினர்
சென்னையில் சம்பவம்

சென்னை, செப் 29

சென்னை விமான நிலையத்தில் நேற்று திங்கட்கிழமை காலை நடந்த விமான விபத்தில் பயணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்கள்.

பம்பாய் செல்ல வேண்டிய அந்த ஏயர் பஸ் மேலே எழும்பிப் பறக்கத் தயாரான போது வலது பக்க இயந்திரத்தில் நெருப்பு தோன்றியது.

இதனால் உடனடியாக 'பிரேக்' போட வேண்டி ஏற்பட்டது. விமானம் ஓடுபாதையைத் தாண்டி சுமார் அரைக்கிலோ மீட்டர் தூரம் ஓடி நின்றது.

நான்கு அவசரவாயில்கள் வழியே பயணிகள் தப்பி ஓடினார்கள். (ஒ)

வெளி உலகில்

றேகனின் நடவடிக்கை டுட்டு கண்டனம்

கேப்டவுன், செப் 29

இனவெறி கொண்ட பிரிட்டோரியா அரசிற்கு எதிராக பொருளாதாரத் தடைகள் விதிக்கக் கோரும் அமெரிக்க நாடாளுமன்ற மசோதாவை ஜனாதிபதி றேகன் தமது ரத்து அதிகாரங்களைப் பிரயோகித்து தடைசெய்திருப்பதை தென்னாபிரிக்க தேசியவாதத் தலைவர் டெஸ்மண்ட் டுட்டு கண்டித்துள்ளார்.

கேப்டவுனில் தமது இல்லத்திலிருந்து அறிக்கை வெளியிட்ட அவர், றேகனின் நடவடிக்கை தமக்கு வியப்பு அளிக்கவில்லை என்றதுடன் அமெரிக்க மக்கள் தமது தலைவரின் கருத்துக்கு மாறான கருத்துக்களை கொண்டிருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாக தெரிவித்தார். (ஒ)

லெபனான் மோதலில் 62 பலி 200 காயம்

பெய்ரூட், செப். 29

லெபனானில் போட்டி கிறிஸ்தவ மக்கள் படைகளிடையே நடந்த மோதலில் 62 பேர் பலியாகினர். 200 பேர் படுகாயத்துக்குள்ளானார்கள்.

பெய்ரூட்டை கிழக்கு மேற்காகப் பிரிக்கும் எல்லையின் இருபகுதியிலும் தீவிரமாக பீரங்கிச் சண்டை நடந்தது.

கிறிஸ்தவக்கட்சியின் முன்னாள் தலைவர் கோபேகாவிற்கு விசுவாசமான படைகள் கிழக்கு பெய்ரூட்டில் தாக்குதலை ஆரம்பித்ததைத் தொடர்ந்து இச் சண்டை மூண்டது.

இந்த ஆண்டு ஜனவரியில் கோபேகாவை பதவி நீக்கம் செய்த டாக்டர் ஜாஜாவின் குழுவினர் போட்டி குழுவிடமிருந்து அந்தப் பகுதியை மீண்டும் பெற்றுள்ளார்கள். (ஒ)

முக்கிய அணு ஆலையை பார்வையிட அனுமதி

மாஸ்கோ, செப் 29

மத்திய ஆசியாவிலுள்ள முக்கிய அணு ஆயுத சோதனை நிலையத்தை பார்வையிடுவதற்கு வெளி நாட்டவர்களுக்கு ரஷ்யா அனுமதி வழங்கியது.

இந்த நிலையத்திற்கு பலநாட்டு பத்திரிகையாளர்கள் ரஷ்ய ராணுவ விமானங்களிலும் ஹெலிகொப்டர்களிலும் அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

அங்கு சோதனை நடவடிக்கைகள் நடைபெறவில்லை என்பதை உலகிற்குக் காட்டவும், அணு ஆயுத சோதனைகளை நிறுத்தி வைப்பதில் ரஷ்யாவுடன் சேர்ந்துகொள்ளுமாறு வாஷிங்டனை அழைப்பதும்தான் ரஷ்யா மேற்கொண்டிருக்கும் இந்த நடவடிக்கையின் நோக்கமாகும் (ஒ)

600 பஸ்களில் 27,000 அகதிகள் வெளியேற்றம்

இஸ்தான்புல், செப். 29

துருக்கித் தலைநகரான இஸ்தான்புல்லிருந்து சுமார் 27 ஆயிரம் மக்கள் வெளியேறிக் கிழக்கு ஜேர்மனியில் தஞ்சம் கோரியுள்ளனர்.

இதற்காக 600 பஸ் வண்டிகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.

ஆனால் மேற்கு ஜேர்மனி ஊடாகக் கிழக்கினுள் செல்லவிடாது வேறு மார்க்கமாக அங்கு செல்லும்படி மேற்கு ஜேர்மனி அதிகாரிகள் தடை விதித்தனர். (ஒ)

மறுபரிசீலனை கோரிக்கை

வாஷிங்டன், செப் 29

ஐ நா. தூதரகத்திலிருந்து 25 ரஷ்ய அதிகாரிகளை வெளியேற்றும் நடவடிக்கையினை மறுபரிசீலனை செய்யுமாறு ரஷ்யா அமெரிக்காவைக் கேட்டுள்ளது.

எதிர்காலத்தில் வல்லரசுகளிடையே நடைபெற உள்ள உச்சிமாநாடுகளுக்கு இந்த வெளியேற்றும் நடவடிக்கை பாதகத்தை ஏற்படுத்தும் எனவும் தெரிவித்துள்ளது. (ஒ)

சீனாவில் போலாந்து ஜனாதிபதி

பீகிங், செப். 29

போலாந்து ஜனாதிபதி ஜாருசல்ஸ்கி இன்று சீனாவிற்கு விஜயம் மேற்கொண்டார்.

1960 ல் ரஷ்ய - சீன பிளவுகளின் பின்னர் ரஷ்யா ஆதரவான நாட்டின் தலைவர் ஒருவர் சீன விஜயம் செய்வது இதுவே முதற்தடவையாகும். (ஒ)

நவராத்திரி காலங்களில் எள் எண்ணெய் எரிப்பது சிறப்பு

விதயாசாகர, நியாயசிரோமணி

கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்

(ஆலோசகர், வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்)

விரதங்களைப் பற்றி முக்கியமாக விரத சூடாமணி என்னும் நூலில் கூறப்பட்டதாவது:

திதியைப் பிரதானமாகக்கொண்ட விரதங்களுள் நவராத்திரி விரதமும் ஒன்று.

பிரதமை முதலாக நவமி ஈறாக ஒன்பது திதிகளில் இரவு காலத்தில் பிரதானமாகவும் பகலில் சாதாரணமாகவும் வழிபடுவதே நவராத்திரி விரதமாகும்.

இந்தவருடம் தமிழ் பஞ்சாங்கப்படி 18ஆம் திகதி விரதம் ஆரம்பிக்கப்பட்டு 25ஆம் திகதி ஈறாக சரஸ்வதி பூஜை முற்றுப்பெற்று 26 ஆம் திகதி விஜயதசமி வருகின்றது.

இந்த எட்டுநாட்களில் நாம் பூஜை செய்ய வேண்டிய கிரமம்:-

சனி, ஞாயிறு, திங்கள் மூன்றுநாளும் காலை மாலையில் பிரதமை துதியை திருதியை ஆகிய மூன்று திதிகளில் துர்க்கையையும்—

செவ்வாய், புதன் காலை மாலையும் வியாழன் காலையும் உள்ள மூன்று திதிகளில் லக்ஷ்மியையும்—

வியாழன் மாலை மூல நக்ஷத்திரத்துடனும் சப்தமி திதியுடனும் கூடிய இரவில் சரஸ்வதி முதலாம் பூஜையை ஆரம்பித்துவெள்ளி, சனி காலை மாலை பூஜைகளுடன் சரஸ்வதி பூஜையையும் முடிக்கவேண்டும்.

இவ்விதம் செய்வதால் பிரதமை, துதியை, திருதியை ஆகிய மூன்று திதிகளில் ஆறு பூஜைகள் துர்க்கைக்கும் —

செவ்வாய், புதன், வியாழன் பகலுடன் ஐந்துபூஜைகள் சதுர்த்தி பஞ்சமி, ஷஷ்டி திதிகளில் லக்ஷ்மிக்கும் -

வியாழன் இரவு, வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்கள் சப்தமி, அஷ்டமி, நவமி ஆகிய திதிகளில் ஐந்து வேளை சரஸ்வதியையும் பூஜைசெய்தவர்களாகின்றோம்.

திதிப்பிரதானமான விரதம் இந்த நவராத்திரிபூஜை ஆகையால் துர்க்கைக்கு மூன்று திதிகளில் ஆறு காலமும், லக்ஷ்மிக்கு மூன்று திதிகளில் ஐந்துகாலமும் சரஸ்வதிக்கு மூன்று திதிகளில் ஐந்துகாலப் பூஜையும் நடைபெறுவதை அவதானிக்கலாம். ‘மூலேன ஆவாஹயேத் தேவீ’ என இந்த வாக்கியம் சரஸ்வதி தேவியை ஆவாஹனம் செய்ய வேண்டிய தினத்தைக் குறிப்பிடுவதால் வியாழன் மாலை மூல நக்ஷத்திரத்துடன் கூடிய திதியில் ஆரம்பித்து சரஸ்வதி பூஜையைச் செய்யவேண்டும். இவ்விதமே நடைபெறுவதே சாஸ்திர சம்மதமாகும்.

வாரத்தை முக்கியமாகக்கொண்ட விரதமல்ல இது. இதில் 23 ஆம் திகதி வியாழனன்று ஷஷ்டியும் - சப்தமியும் ஒன்றாக வருகிறபடியால் ஒரு நாள் குறைகின்றதே அன்றி திதிகள் குறையவில்லை. 26 ஆம் திகதி விஜயதசமியைக் கொண்டாடவேண்டியது அவசியம்

எள் எண்ணெய் எரித்தல்

அடுத்தபடியாக நவக்கிரகங்களைப் பற்றியும் சனிக்கிழமை நவராத்திரி [illegible] எரிப்பதைப்பற்றியும் சில [illegible] கப்படுகின்றன:

"ஸ்காந்தம்" என்னும் சமஸ்கிருத ஸ்கந்தபுராணத்தில் இதற்கு விரிவான விளக்கம் கிடைக்கின்றது. (ஸ்காந்தம் பக்கம் 352)

தசரதனுக்கும் சனிபகவானுக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தில் தசரத சக்கரவர்த்திக்கு சனீஸ்வர பகவான் கூறுகிறார்

வாசகர் திருமுகம்

“ஆவணி மாத முதலாவது சனிக்கிழமை ஆரம்பித்து முப்பது மூன்று சனிக்கிழமைகள் தொடர்ந்து என்னை ,வழிபட வேண்டும். என் மேடையில் என்னை அமர்த்தி ஏழு தடவை என்னைப் பிரதக்ஷிணம் செய்து எள், உளுந்து முதலியவை சேர்ந்த பலகார வகை செய்து நிவேதித்து முப்பத்தி மூன்று சனிக்கிழமை தொடர்ச்சியாக வழிபட வேண்டும்’’ என்று கூறுகிறார்

இங்கு நவராத்திரி, புரட்டாசியிலோ அல்லது ஐப்பசியிலோ தான் நிச்சயமாக வரும். இதன் நடுவில் வரும் சனிக்கிழமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று அங்கு சொல்லப்படவில்லை.

மேலும் நவராத்திரி காலங்களில் அவரவருடைய நட்சத்திரங்கள் கெட்டிருந்தால் இவைகளை ஆராதனம் செய்ய வேண்டுமென்று வேதங்கள் கூறுகின்றன.

பொதுவாக தீபங்கள் ஏற்றும் பொழுது பசுநெய்தான் முதலிடம் வகிக்கின்றது. இரண்டாவதாக இலுப்பெண்ணை மூன்றாவதாக எள்+நெய் =எண்ணை நல்லெண்ணையால் விளக்கேற்ற வேண்டும். மற்றவைகளெல்லாம் அதமம்.

ஆகவே சனீஸ்வரனுக்கு பிரியமான எள்ளையும், எள் நெய்யையும் [illegible] கொண்டு [illegible] சனீஸ்வரபகவான் மூலம் மிக அதிகமாக கிடைக்கின்றது

சனிபகவான்

கிரகங்களுக்குள் உத்தமமான கிரகமும், கிரகராஜனும் சனீஸ்வரபகவானே யாவான்; பன்னிரண்டு ராசிகளுள் தான் இருக்கும் ராசியையும் முன்-பின் இரண்டு ராசியையும் ஏழரை வருடம் வியாபித்துக் கொண்டு ஏழு, மூன்று, பத்து ஆகிய இடங்களை முழுப்பார்வையாலும் ஏனைய ஆறு ராசிகளுள் மூன்று ராசிகளை முக்கால் பார்வையாலும் மீதி மூன்றை அரைப்பார்வையாலும் பன்னிரண்டு ராசிகளையுமே தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளவன் கிரகராஜனான சனீஸ்வரபகவானே.

நவராத்திரியில் நவக்கிரக பூஜை

பெண்களை வயதுக் கிரமமாக நவராத்திரி காலங்களில் பூஜை செய்யவேண்டும். சுமங்கலிப் பெண்களை எண்ணை தேய்த்து மங்களஸ்நானம் செய்து அவர்களை பிரத்யக்ஷ தெய்வங்களாக துர்க்கா, லக்ஷ்மி, சரஸ்வதியாக நினைத்து பூஜை செய்வதை காமகோடிபீடாதிபதி முகாம்களில் இன்றும் காணலாம்.

நவராத்திரி காலங்களில் ஆண்கள் எண்ணை தேய்த்து முழுக்கக்கூடாது. பெண்களுக்கு கட்டுப்பாடில்லை. ஆகவே சனீஸ்வர பகவானுக்கு எள் எண்ணை எரிப்பது நவராத்திரி காலத்திலும் செய்யலாம். அதனால் லக்ஷ்மி கடாட்சமேயன்றி குறைவில்லை.

நவக்கிரகங்களை நவராத்திரி காலத்தில் 'வேயுறு தோளிபங்கன்' என்னும் தேவாரங்களை ஓதி வழிபடுவதால் இன்னும் பலன் கூடக்கிடைக்குமேயன்றி குறைவுபடாது.

இவ்விதம் வழிபடுவதால் நவராத்திரிக்கு பூர்ணமாகமாக நவக்கிரக வழிபாடு செய்த பூர்வாங்க கிரியைகளுடன் வழிபட்ட பலன் பூர்ணமாக கிடைக்கும்.

அந்தியேட்டி மடத்தை பாதுகாக்கக் கோரிக்கை

ஊர்காவற்றுறை,செப்30

வேலணைக்கும், மண்கும்பானுக்கும் இடையில், கடற்கரையோரமாக அமைக்கப்பட்டுள்ள சாட்டி அந்தியேட்டிமடம் சிதைந்து வீழும் நிலையில் உள்ளது. இந்து மதஸ்தாபனங்கள் உடன் கவனமெடுத்து அதைத் திருத்திப் புனரமைக்க முன்வரவேண்டும்.

— இவ்வாறு சமூக திருமறைக்கழகத் தலைவர் திரு. சு. சிவசம்பு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"தீவுப் பகுதிக்கும் யாழ் நகருக்கும் தரைமார்க்கமான தொடர்பு துண்டிக்கப்பட்ட நாள் தொடக்கம் காலமானவர்களுக்கு இறுதிக்கிரியைகள் செய்ய கீரிமலைக்கு செல்பவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துள்ளது.

இப்போது தீவுப் பகுதியில் உள்ள எல்லா மக்களும் சாட்டி மடத்தையே பாவித்துவருகின்றார்கள். அப்படியிருந்தும் அந்த மடமானது சரிவரப் பேணப்படவில்லை. கூரையிலிருந்த ஓடுகளும் களவாடப்பட்டுள்ளன.

இதைத்தடுக்க இப்பகுதியிலுள்ள இந்து மதஸ்தாபனங்கள் முன்வந்து சேவையாற்ற வேண்டும் இவ்வாறு அவர் கேட்டுள்ளார். (உ - 16)

உரத் தட்டுப்பாட்டை நீக்கக்கோரி மகஜர்

பண்டத்தரிப்பு, செப்.30

யாழ் விவசாயிகளுக்கு உரம் கிடைக்க துரிதமாக நடவடிக்கை எடுக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை பண்டத்தரிப்பு இளம் விவசாயிகள் கழகம், யாழ் விவசாய விரிவாக்கப்பணிப்பாளர் திரு கிருஷ்ணபிள்ளைக்கு அனுப்பி வைத்துள்ளது.

உரம் இன்றி விவசாயிகள் பெரும் கஷ்டம் அடைகின்றனர்.

ஜூலையில் நட்ட முட்டைக் கோவாவிற்கு தேவையானவையோ, அல்லது யூரியாவோ கிடையாது சமக்காரர் அலைகின்றனராம்.

இடைப்போக வெண்காயம் முட்டைப்பியும் வேலை போடவேண்டிய உரமும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-120)

கொடிதினம்

சாவகச்சேரி, செப். 30

சாவகச்சேரி நோயாளர் நலன்புரிச் சங்கக் கொடிதினத்தை சங்கத் தலைவரும் சாவகச்சேரி நகராட்சி மன்ற ஆணையாளருமான திரு. த. நவரத்தினராசா டிறிபேக் கல்லூரியில் ஆரம்பித்துவைத்தார். (இ-13)

பொய்யாமொழி

குறள்:

தன்னுயிர் தான் அறப் பெற்றானை ஏனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

பொருள்:

தவவலிமையால் தன்னுடைய உயிர் தான் என்னும் பற்று நீங்கப் பெற்றவனை மற்ற உயிர்கள் எல்லாம் (அவனுடைய பெருமையை உணர்ந்து) தொழும்.

BITSMANS INSTITUTES
86 DEC. O/L
வினா விடை வகுப்புக்கள்
(Paper Class)
ஆரம்பம்: 5-10-86 ஞாயிறு 10·00 A m
(விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன)

உதயன்
30 - 09 - 1986 செவ்வாய்க்கிழமை

BITSMANS INSTITUTES
MANIPAY.
87 AUG A/L பங்குடமைக் கணக்கியல்
ஆசிரியர் திரு இராஜன் B. Com. (Special)
ஆரம்பம்: 4.10.1986 சனி 2-30 P.m.
நேர அட்டவணை: சனி, ஞாயிறு 2-30 P.m.

முகவர் சங்க கோரிக்கை ஏற்கப்பட்டது:

எரிபொருள் பற்றாக்குறை வடக்கில் முற்றாக நீங்கும்

பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், செப் 30

வடபகுதியில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு அக்டோபர் மாதத்திலிருந்து நீங்கிவிடும் என தாம் எதிர்பார்ப்பதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வட பிராந்தியக் காரியாலய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடமாகாண எரிபொருள் விற்பனை முகவர் சங்கம் முன்வைத்த கோரிக்கைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொண்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

அநுராதபுரத்தில் எரிபொருளை நிரப்பும் வடபகுதி முகவர்களுக்குக் கட்டுப்பாடின்றி விரும்பியளவு எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்றும் —

அவற்றிற்கான பணத்தைக் காசோலையாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் முகவர் சங்கம் கேட்டிருந்தது

இதனையே கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொண்டுள்ளது; அடுத்த மாதம் முதல் இவை அமுலுக்கு வரலாம் என்றும்! இதனால் வடக்கில் எரிபொருள் தாராளமாகக் கிடைக்கும் என்றும் தற்போது நிலவும் பற்றாக்குறை முற்றாக நீங்கும் எனவும் அவர் தெரிவித்தார்.. (உ-5)

வழிப்பறிக் கொள்ளைகளை

தடுப்பதற்கு ஒத்துழைப்புத் தருக

ஈ. பி. ஆர் எல். எவ் பகிரங்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப் 30

வழிப்பறி கொள்ளைகளைத் தடுத்து நிறுத்த எடுக்கப்படும் முயற்சிகளுக்கு சகல அமைப்புக்களும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக விடுக்கப்பட்ட அறிக்கையொன்றில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளதாவது;

ஈழவிடுதலைப் போராட்டத்தின் இன்றைய கட்டத்தில் ஈழத்தின் பொருளாதாரம் பேணப்படுவதில் அக்கறை காட்டுவது மிக அவசியம்.

இன்று பல பொருட்கள் ஸ்ரீலங்காப் பகுதிகளில் இருந்து வந்து சேரவேண்டிய நிலை உள்ளது இப்படியான பொருட்களில் தங்கியிராது ஈழத்தின் உற்பத்திகளை பெருக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை தென் இலங்கையில் இருந்து சில பொருட்களைத் தருவிக்கவேண்டியுள்ளது தவிர்க்க முடியாததுள்ளது இப்படித் தருவிப்பது மிக சிரமத்தின் மத்தியில் நடந்து வருகிறது அப்படித் தருவிக்கப்படும் பொருட்கள் சில சமயங்களில் வழிப்பறி செய்யப்படுவதால் தருவிப்போரும் பாவனையாளர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் தற்போது அருகி வருகிறபோதிலும் அவ்வப்போது சில சம்பவங்கள் இடம்பெற்றே வருகின்றன,

இவற்றை நிறுத்துவதற்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முயற்சி எடுக்கும். இதற்கு சகல அமைப்புக்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் —

—இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது (உ-எ)

சேமலாப நிதி மூலம் சேமிக்கப் பழகுங்கள்

உதவி ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், செப் 30

சேமலாப நிதிப் பணத்தை ஒழுங்காக செலுத்தி தமது பிற்காலத்தை திடப்படுத்திக் கொள்ள சகல தொழிலாளிகளும் முன்வர வேண்டும்.

இவ்வாறு உதவித் தொழில் ஆணையாளர் திரு. என். தியாகராசா கூறினார்.

தனியார்துறை ஊழியர்களுக்கான ஊழியர் சேமலாப நிதிச் சட்டத்துக்குப் புத்துணர்வினை வழங்கும் வைபவத்திற்கு தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்

1958 ஆம் ஆண்டில் தனியார் துறையினருக்கான சேமலாபநிதிக் கணக்குச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதுவரை வெகு குறைவான தொழிலாளர்களே இதனால் பலன் அடைகின்றனர்.

மற்றையோர் தமது அசட்டையினாலும், முதலாளிமார்களின் அசட்டையினாலும், இதன் பலனை இழக்கின்றனர்

பல ஊழியர்கள் தமது ஓய்வுகாலத்தில் ஒருலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பணத்தை சேமலாப நிதியிலிருந்து பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது

இவர்களைப் போல் ஏன் எல்லா ஊழியர்களும் தமது சேமலாபநிதியைப் பெறமுடியாது? இப்படி அவர் கேட்டார். (உ-5)

பணிமனை இடமாற்றம்

யாழ்ப்பாணம். செப். 30

ஊர்காவற்றுறை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, காரைநகர் ஹெட்பேர்ட் கட்டடத்திலிருந்து இடம் மாற்றப்பட்டு ஊர்காவற்றுறை வட்டார வைத்திய அதிகாரி வதிவிடத்தில் தற்பொழுது இயங்கி வருகிறது. (உ-7)

விற்பனைக்கு

சகல வசதி நிறைந்த வீட்டுடன் கூடிய மா, பலா தென்னை ஆகிய கரும்படி உள்ள ஆறு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு விபரம் அறிய

கோ ஜுவல் ஹவுஸ் சாவகச்சேரி (அல்லது)

மதராஸ் ஜுவலறி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

காவலூரில்---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மிய வட்டத்தின் தலைவரும். கரம்பன் சண்முகநாதன் மகாவித்தியாலய அதிபருமான திரு ஆ. சபாரத்தினத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

தற்போது தீவுப்பகுதியில் புவியியல் அமைப்பானது சரிவரப் பேணப்படாமையினால் எதிர்காலத்தில் நன்னீர் கூட உவர்ப்புத் தன்மை பெற்றுவிடும் எனவும்—

இதனால் இப்பகுதி மக்கள் எச்சரிக்கையாகவும் அவதானமாகவும் நடந்து கொள்ள இப்பயிற்சி வகுப்பு உதவும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ.16)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட், அச்சகத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 30 - 09 - 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road Jaffna.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 40 News

★ இப்படியும் ஒரு யோசனை!

லண்டன், செப் 30

யாழ் குடாநாட்டைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது என்றால் பத்து மைல்களுக்கு ஒரு இராணுவ முகாம் நிறுவப்பட வேண்டும். இது நடைமுறைச் சாத்தியமான காரியமல்ல.

இப்படி வடபகுதி இணைப்பதிகாரி பிரிகேடியர் ஜெரி சில்வா தெரிவித்ததாக லண்டன் டைம்ஸ் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது

லண்டன் டைம்ஸின் செப்டம்பர் 19 இதழில் அதன் செய்தியாளர் மைக்கல் ஹாமலின் இச்செய்தியை எழுதியிருக்கிறார்

இவர் செப்டம்பர் முற்பகுதியில் யாழ்ப்பாணம் வந்திருந்தார். (உ-எ)

அகதிகள் பிரச்சினை பற்றி புனர்வாழ்வு அமைச்சிடம் நேரில் முறையிட முடிவு

யாழ்ப்பாணம், செப். 30

பிரஜைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு ஒஸ்வின் பெர்னாண்டோவைச் சந்திப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இக்கூட்டம் குழுத் தலைவர் திரு. எஸ் அருமைநாயகம் தலைமையில் ஞாயிறன்று நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்றது.

அகதிகள்

வன்செயல்களால் இடம்பெயர்ந்த அகதிகளுக்கான நிவாரண உதவிகளை அரசு நிறுத்தியுள்ளதோடு அகதிகளை அவர்களது சொந்த இடத்திற்குச் சென்று மீளக்குடியேறுமாறு வற்புறுத்துகிறது.

இத்தகைய நிர்ப்பந்தங்களை அரசு பேச்சுவார்த்தைகள் முடியும் வரை செய்யக்கூடாது என்றும் —

அதுவரை அகதிகளுக்கு தொடர்ந்து உதவி அளிக்க வேண்டும் என்றும் புனர்வாழ்வு அமைச்சின் பிரதிநிதிகளை நேரடியாகச் சந்தித்துக் கேட்பதென்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வவுனியா நோயாளிகள்

வவுனியாவில் ஆபத்தான நிலையிலுள்ள நோயாளிகளை அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்வதை விடுத்து; யாழ் ஆஸ்பத்திரிக்கே அவர்களை அனுப்பி வைக்க வேண்டும் என வவுனியா அரச அதிபரை கேட்டுக் கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது (உ-5)

மாகாண சபையை எதிர்த்து நீதிமன்றத்தில் முறையீடு

அதில் தோல்வி கண்டால் மக்கள் கிளர்ச்சியாம்

கொழும்பு, செப் 30

மாகாண சபையை எதிர்த்து நீதிமன்றம் செல்வோம் தோல்வி கண்டால் மக்கள் கிளர்ச்சி ஏற்படும்

— இப்படி அத்தனகல்ல எம் பி திரு லக்ஷ்மன் ஜெயக்கொடி தெரிவித்தார்.

ஜா எலயில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அக்கூட்டத்தில் பேசுகையில் மஹரகம எம். பி. திரு. திணேஷ் குணவர்த்தன சொன்னதாவது!

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படின் இந்த நாட்டில் சிங்களவர் எவரும் இருக்கமாட்டார்கள்' — என்றார்

கம்பஹா சமா மகா விகாராதிபதி வண [illegible]டர் தர்மிட்டிபால ரத்தின சாரதேரர் பேசுகையில், 'எல்லாள யுகத்தை உருவாக்கப்போவதாக ஜனாதிபதி கூறிவருகிறார். இக்கூட்டத்தில் பேசுவதை ஜனாதிபதி நேரில் வந்து கேட்பாரானால் நாளைக்கே கூட்டாளிகளுடன் பதவியை விட்டு விலகி விடுவார் - என்றார் (உ-எ)

பல்கலைக்கழக மாணவர்களின் போர்

தொடரும் என அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப் 30

சிறையிலுள்ள கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டம் முடியும் வரை யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் தொடரும் என பல்கலைக்கழக மாணவர் நிர்வாகக் குழு முடிவெடுத்துள்ளது

நேற்று பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற மாணவர்களின் பொதுக் கூட்டத்திலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது

உண்ணாவிரதிகளுக்கு உறுதுணையாக மக்கள் உள்ளனர் என்பதைக் காட்டவும் —

அவர்களுக்கு ஆதரவு அளிக்கவும் —

அரசின் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மூலம் உண்ணாவிரதம் பற்றி திரித்துக் கூறுவதை இனங்காட்டவும் —

கைதிகளின் போராட்டத்தின்பால் சர்வதேசங்களின் கவனத்தை ஈர்க்கவும் —

சகல தமிழ் மக்களையும் இப்பிரச்சினை குறித்து உணர்வு கொள்ளச் செய்து பங்களிக்க வைக்கவும் —

தொடர்ந்து போராடுவது என பல்கலைக்கழக மாணவர் நடவடிக்கைக் குழு தீர்மானித்துள்ளது. (உ-5)

புதிய தொலைபேசி இணைப்புகள்

யாழ்ப்பாணம், செப் 30

யாழ்ப்பாணத்தில் புதிய தொலைபேசி இணைப்புக்களுக்காக விண்ணப்பித்தவர்களுக்கு அவை வழங்கப்படவுள்ளன.

முற்பணம் செலுத்தி விண்ணப்பித்து விட்டு காத்து இருப்பவர்கள் பற்றுச் சீட்டுக்களுடன் யாழ் தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் தொடர்பு கொண்டால், புதிய இணைப்புக்களைப் பெற முடியும் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

பல்கலைக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு தங்கல்

இரண்டாம் நாள்- ஆடியபாதம்வீதி, பொற்பதிவீதி, கோண்டாவில், உரும்பராய், ஊரெழு, பொக்கணைகுடியேற்றம், ஊரெழு கணேசலிங்கம் வித்தியாலயத்தில் இரவு தங்கல்

மூன்றாம் நாள்- ஊரெழு சொந்தியா வடி, மயிலங்காடு, வழிசிட்டி, மயிலணி, சுன்னாகம், மருதனுமடம், இணுவில் சைவமகளிர் வித்தியாலயத்தில் இரவு தங்கல்.

நான்காம் நாள்- இணுவில், இணுவில் சுதுமலை வீதி, [illegible] அம்மன் கோவில், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோவிலடி பல்கலைக்கழகம்

நேற்றும்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible] கறுப்புப்பட்டிகளுடன் அமர்ந்திருந்த இம் மாணவ, மாணவிகள் சோக கீதங்களை இசைத்தபடி இருந்தனர்.

சுந்தரபுரத்தில்

நேற்று வயாவிளான் சுந்தரபுரம் கிராமத்தில் ஒரு நாள் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

சுந்தரபுரம் பொது நல சபையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த உண்ணாவிரதத்தில் 200 பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

[illegible]

மாணவர் பேரணிக்கு முழு ஆதரவு வழங்குக

தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப். 30

தமிழ்பேசும் அரசியல் கைதிகளின் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவைத் தெரிவித்து மாணவர் ஒன்றியத்தினால் இன்று நடத்தப்படும் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு பரிபூரண ஆதரவு வழங்கும் படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர், பெற்றோர்களைக் கோரியுள்ளது

இது சம்பந்தமாக சங்கப் பொதுச்செயலாளர் திரு. க. மகாலிங்கம் அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார்.

யாழ்ப்பாணத் தமிழ் இளைஞர்கள் எவ்விதகாரணமோ, விசாரணையோ இன்றி நீண்டகாலம் வெலிக்கடை, பூஸா ஆகிய இடங்களில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு துன்பங்களைப் பொறுக்க முடியாத நிலையில் நீதிகோரி கடந்த 25 தினங்களாக உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர்.

மரணத்தின் விளிம்பில் இவர்களுக்கு அனுதாபம் தெரிவித்து மாணவர் கூட்டமைப்பு இன்று நடத்தும் பேரணிக்கு நாம் பூரண ஆதரவை வழங்குகின்றோம்- இப்படி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

மட்டுநகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தியோகுமாரை வழிமறித்து அவரை கடத்திச் சென்றனர்

இந்தத் தகவல் கிடைத்ததும் ஆயுதப்படையினர் புன்னைச்சோலை, மாமாங்கம், முகத்துவாரம் ஆகிய பகுதிகளை முற்றுகையிட்டு தீவிர தேடுதல்களைத் தொடங்கினர்.

தேடுதல் நடந்து கொண்டிருந்த சமயம் வெடிச்சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன. (உ-எ-21)

பஸ் கட்டண..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யான ஆட்சேபத்தைத் தெரிவித்தனர்.

சபைத் தலைவரிடம் பஸ் பயணிகள் பிரதிநிதிகள் குழு நேரில் தெரிவித்ததாவது;

இன்றில் (செப் 28) இருந்து இரு வாரங்களினுள் பஸ் கட்டண உயர்வு மீளாய்வு செய்யப்பட்டு சாதகமான நியாயமான பதில் சபை நிர்வாகம் பத்திரிகைகள் மூலம் வெளியிட வேண்டும்.

இதில் சபை நிர்வாகம் தவறினால், மகஜரில் கையொப்பமிட்ட பயணிகள் மற்றும் அக்கறைகொண்டவர்களும் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தி அதன்மூலம் கட்டண உயர்வுக்கு எதிராக எடுக்கவுள்ள நேரடி நடவடிக்கை விவரத்தை அறிவிப்பார்கள் ''—

இப்படி குழுவின், [illegible] அதிகாரிகளிடம் தெரிவித்தனர். [illegible] சமர்ப்பிக்கப்பட்ட மகஜரில் கூறப்பட்டிருப்பதாவது;-

அரசு இப்பிரதேசத்தில் மேற்கொண்டுவரும் அநீதியான நடவடிக்கைகளுடன் தொடர்பானதாகவே பஸ்கட்டண உயர்வினை நாம் கருதுகிறோம்.

இத்தகைய காரணங்களினால் அரசு எதிர்நோக்க வேண்டிய நட்டங்களை பஸ் கட்டண உயர்வினூடாக சாதாரண பொதுமக்கள்மீது சுமத்தப்பட்டுள்ளன

இப்பிரதேசத்தில் நிலவும் அசாதாரணமான சூழ்நிலையைப் பயன்படுத்தி வட பிரதேசத்தில் மட்டும் அமுல்நடத்தப்படும் பஸ் கட்டண உயர்வினை நாம் எதிர்க்கிறோம்.

பழைய பஸ் கட்டண விகிதத்தையே மீண்டும் அமுல் நடத்த வேண்டும் என்று கோருகிறோம்.

புதிய கட்டண விகிதம் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும்— என்று உள்ளது. (அ-எ)

முஸ்லிம் வர்த்தகர்கள் படையினர் செயலை கண்டித்து ஹர்த்தால்

மட்டக்களப்பு, செப் 30

ஆயுதப்படையினர் இறால் வாங்கியதால் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லிம் வர்த்தகர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

கடந்த சனிக்கிழமை ஆயுதப்படையினர் முஸ்லிம் வியாபாரி ஒருவரிடம் 2 கிலோ இறால் வாங்கினார்களாம்.

மீண்டும் திரும்பிச் சென்று இன்னும் 4 கிலோ இறால் வாங்கினார்களாம் இதைத்தொடர்ந்து அந்த வியாபாரி "ஐயா ஒரு கிலோ மட்டு இறால் 360 ரூபா இப்படி தந்தால் எனக்கு நட்டம்தான் வரும்"- என்று ஆயுதப்படையினரிடம் சொன்னார்.

படையினர் அந்த இடத்தில் வைத்து அவரைத் தாக்கியதுமல்லாமல், முகாமுக்குக் கொண்டு போய்த்தாக்கிய பின்னரே அவரை விடுவித்தனராம்.

இச்செயலை ஆட்சேபித்தே இந்த ஒரு நாள் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. (உ-எ-21)

மட்டுநகர் ஊரடங்கு

மட்டக்களப்பு, செப். 30

மட்டக்களப்பு மாநகர எல்லைக்குள் நேற்று இரவு 8 மணிக்கு அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டம் இன்று காலை 5 மணியுடன் நீக்கப்பட்டது. (உ-எ-21)

அத்தியடியில் உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், செப். 30

அத்தியடி இளைஞர்கள் ஏற்பாட்டில் இன்று காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை அத்தியடி பிள்ளையார் கோயில் முன்றலில் வெலிக்கடை, பூஸா முகாம்களில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் பேசும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் நடைபெறும். (உ-எ(

முறைகேடாக நடக்க முற்பட்ட இளைஞருக்கு மின்கம்பத் தண்டனை

அவரது தந்தை நஞ்சருந்தினார்

[illegible]லாலி, செப். 30

அச்சுவேலியில் பெண் ஒருவரை மானபங்கப்படுத்த முயன்ற ஒருவருக்கு மூன்றுமணிநேர மின்கம்ப தண்டனைவழங்கப்பட்டது

அச்சுவேலி அச்சுநகரைச் சேர்ந்த இளைஞன் ஒருவனுக்கே போராளிகள் இயக்கங்களில் ஒன்றினால் இத் தண்டனை விதிக்கப்பட்டது.

மகனுக்குத் தண்டனை வழங்கப்பட்ட பின்னர் இளைஞரின் தந்தை கிருமிநாசினி அருந்தினார்.

அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு முன்னால் உள்ள சந்தியில் நேற்று மின்கம்பத் தண்டனை விதிக்கப்பட்டது.

தண்டனைக்குள்ளான இளைஞரின் தந்தைகிருமி நாசினி அருந்தியமை அறிந்து சிலர் மானபங்கப்படுத்தப்பட்ட பெண்ணின் வீட்டைத் தாக்கியதாக கூறப்படுகிறது. வீட்டில் இருந்தவர்களும் அடித்து இம்சைப்படுத்தப்பட்டனர். இதை யடுத்து சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்த போராளிகள் அது சம்பந்தமாக சிலரைக் கைது செய்தனர் என்று கூறப்படுகிறது. (உ-119)

நாளை முதல் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திகதி முதல் 1985 செப்டம்பர் 27 ஆம் திகதி வரை பதினொரு கடத்தல் மற்றும் கொள்ளைச் சம்பவங்களைக் கண்டித்து 1985 அக்டோபர் 4 ஆம் திகதி பூரண ஹர்த்தால் அனுட்டிக்கப்பட்டது இந்த ஹர்த்தாலின் பின் குறைந்திருந்த வழிப்பறி திருட்டுகள் கடந்த ஜூன் 14 ஆம் திகதி முதல் தொடங்கிவிட்டன.

பல நிறுவன லொறிகள் வழி மறிக்கப்பட்டு பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

அரச படைகள் முகாம்களைவிட்டு வெளியேறாமல் விடுதலை இயக்கங்கள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் இடங்களில் இக் கொள்ளைகள் நடைபெற்றிருக்கின்றன.

இந்த ஆயுதம் ஏந்திய கொள்ளையர்கள் யார்?

இப்படி மூன்று அமைப்புகளும் கூட்டாக விடுத்த பிரசுரம் ஒன்றில் கேட்கப்பட்டிருக்கிறது. (உ)